விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 26 சனி 10.07.2021 மலர் - 2, இதழ் - 95

# காங்கிரஸின் வெளிநாட்டு கிளைகள்

ஆலன் ஆக்டவியன் ஹியூம் என்ற இங்கிலாந்து நாட்டவரால்1885ல் பாரதத்தில் காங்கிரஸ் கட்சி துவக்கப்பட்டது. கட்சி தொடக்கக் காலத்தில் அவர்கள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கவில்லை. அப்போது அதன் குறிக்கோள் பாரத தேசத்தவர்களுக்கு ஆங்கிலேய அரசின் தயவில் சிறு சிறு சலுகைகள், பதவிகள் வாங்கி தருவதுதான் என்பது வரலாறு.

**வெளிநாட்டு கிளைகள்:**

வெளி நாட்டவரால் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி, தற்போது இத்தாலி, சுவிட்சர்லாந்து, சுவீடன், ஆஸ்திரியா, பெல்ஜியம், ஹாலந்து, போலந்து, பின்லாந்து, நார்வே ஆகிய நாடுகளில் தன் கிளைகளை ஆரம்பித்துள்ளது. முன்னதாக 2019ல் துருக்கியில் காங்கிரஸ் தன் வெளிநாட்டுக் கிளையை துவக்கியது குறிப்பிடத்தக்கது. ராகுல் காந்தியின் நெருங்கிய உதவியாளரான சாம் பிட்ரோடா, இந்திய வெளிநாட்டு காங்கிரஸின் தலைவராக உள்ளார்.

**தலைவர்கள் நியமனம்:**

காங்கிரஸ் கட்சிக்கு தற்போது நிரந்தர தலைவர் என யாரும் இல்லை. சோனியாதான் தற்காலிகத் தலைவராக செயல்படுகிறார். ஆனால் தன் வெளிநாட்டு கிளைகளுக்கு உடனடியாக தலைவர்களை நியமித்துள்ளது காங்கிரஸ்.

**தொடர் தோல்வி:**

ஒரு காலத்தில் எதிர்கட்சிகளே இல்லாமல் பாரதத்தை ஆண்ட காங்கிரஸ் தற்போது ராஜஸ்தான், பஞ்சாப் உள்ளிட்ட ஒரு சில மாநிலங்களில் மட்டுமே நேரடியாக ஆட்சி செய்கிறது. தமிழகம், ஜார்கண்ட் உள்ளிட்ட ஒரு சில மாநிலங்களில் கூட்டணி என்ற பெயரில் அம்மாநில கட்சிகளின் தயவில் காலம் தள்ளுகிறது. பாரதத்தில் தன்னுடைய தொடர் தோல்விகளுக்கும் அதளபாதால வீழ்ச்சிக்கும் காரணம் தேடாமல், வெளிநாடுகளில் கிளைகளை காங்கிரஸ் ஆரம்பிக்கிறது. இது குறித்து நெட்டிசன்கள் கிண்டல் அடித்து வருகின்றனர் என்பது ஒருபுறம் இருக்க, இதன் பின்னணி குறித்து மத்திய அரசு ஆராய வேண்டியதும் அவசியம்.

**காரணம் என்ன?**

கடந்த ஆண்டு டிசம்பரில், இந்திய வெளிநாட்டு காங்கிரஸின் உறுப்பினர்களில் ஒருவர், ஜெர்மனியில், நமது




வேளாண் சட்டங்களுக்கு எதிராக நடத்திய போராட்டத்தில் பாகிஸ்தான் கொடியை காட்டினார். விவசாய சட்ட போராளிகளுக்கு, காங்கிரசின் ஜெர்மன் கிளை ஒருகோடி ரூபாய் நிதியுதவி அளிப்பதாக அறிவித்திருந்தது. மேலும், காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நாவில் துருக்கி, பாகிஸ்தானுக்கு தனது ஆதரவை வழங்கிய சில நாட்களில், காங்கிரஸ் துருக்கியில் தனது வெளிநாட்டு அலுவலகத்தை திறந்தது. பயங்கரவாதிகளின் சொர்கபுரியான பாகிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடு துருக்கி என்பது அனைவரும் அறிந்ததே.

மதிமுகன்

# முகநூலுக்கு உச்சநீதிமன்றம் குட்டு




விஜயபாரதம்

கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற கலவரம் தொடர்பான வழக்கில், நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க முகநூல் இந்தியா நிர்வாக இயக்குநர் அஜித் மோகனுக்கு, டெல்லி சட்டப்பேரவை நல்லிணக்க குழு நோட்டீஸ் அனுப்பியது. நோட்டீஸை ரத்து செய்யக்கோரி உச்ச நீதிமன்றத்தில் அஜித் மோகன் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு வந்தது. அப்போது, நோட்டீஸை ரத்து செய்ய மறுத்து, மனுவை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், '27 கோடி பயனாளர்களை கொண்டுள்ள முகநூல் நிறுவனம் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம் என அறிவுறுத்தினர். மேலும், சமூக ஊடக பதிவுகளால் தேர்தல் நடைமுறைகளே அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. பாதிக்கப்பட்டவர்களின் குரலை ஒலிக்க செய்வதில் சமூக ஊடகங்கள் மிக முக்கிய பங்கு வகித்தாலும், சில சமயங்களில் அமைதியை சீர்குலைக்கும் பதிவுகளுக்கான தளமாகவும் அமைந்துவிடுகிறது. இது போன்ற பதிவுகளால் ஏற்படும் பிரச்னைகளுக்கு முகநூல் நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும். சமூக ஊடக பிரதிநிதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பும் அதிகாரம் டெல்லி சட்டப்பேரவைக்கும் அதன் குழுவுக்கும் உள்ளது' என நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.

# தி.மு.க. இடைத்தரகர்கள்

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, 'டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க நிர்வாகிகள், ஆளும் கட்சியினர் என்ற அதிகாரத்தை பயன்படுத்தி தாங்கள் டோக்கன் கொடுக்கும் விவசாயிகளிடம் மட்டும்தான் நெல் கொள்முதல் செய்யவேண்டும் என அதிகாரிகளை மிரட்டுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. பல விவசாயிகள் 20 நாட்கள் காத்திருந்தும் ஆளும் கட்சியினரின் கருணைப் பார்வை இல்லாததால் நெல்லை விறபனை செய்யமுடியாமல் துன்பப்படுகின்றனர். எனவே, தி.மு.க இடைத்தரகர்களை முதலமைச்சர் உடனடியாக கட்டுப்படுத்தி, அனைத்து நெல் கொள்முதல் நிலையங்களிலும், கொள்முதலை விரைவுபடுத்தவேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.



விஜயபாரதம்

# வாட்ஸ்அப் கட்டாயப்படுத்தாது

வாட்ஸ்ஆப், தன் தனிநபர் தகவல் பாதுகாப்பு தொடர்பான, 'பிரைவசி' கொள்கையில் மாற்றம் செய்வதாக அறிவித்தது. அதன்படி, பயனாளர்களின் தகவல்கள், தாய் நிறுவனமான முகநூலுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என அறிவித்தது. இந்த அறிவிப்பு பெரும் சர்ச்சையை கிளப்பியது, மத்திய அரசும் கடும் கண்டனம் தெரிவித்தது. இந்நிலையில், டெல்லி உயர்நீதிமன்றத்தில், இது குறித்த வழக்கு விசாரணையின்போது, வாட்ஸ் ஆப் நிறுவனம் சார்பில், 'புதிய 'பிரைவசி' கொள்கையை, வாட்ஸ்ஆப் நிறுத்தி வைக்கிறது. கொள்கையை ஏற்க எந்த பயனாளர்களையும் கட்டாயப்படுத்த மாட்டோம். கொள்கையை ஏற்காதவர்களுக்கு வழங்கப்படும் சேவை எவ்விதத்திலும் குறைக்கப்படாது. தகவல் பாதுகாப்பு சட்டம் அமலுக்கு வரும்வரை, புதிய கொள்கை குறித்த செய்தியை பயனாளர்களுக்கு காட்டுவோம். இவ்விவகாரம் தொடர்பாக மத்திய அரசுக்கு அறிக்கை அளித்துள்ளோம்' என தெரிவிக்கப்பட்டது.

விஜயபாரதம்



# அதிகார வரம்பு மீறும் மாநில அரசு

தமிழகத்தில் நீட் தேர்வு பாதிப்புகளை ஆராய, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் 9 பேர் அடங்கிய உயர்மட்டக் குழுவை அமைத்தது. இதை எதிர்த்து பா.ஜ.க பொதுச் செயலாளர் கரு.நாகராஜன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில் மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை சார்பு செயலாளர் பதில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில், ‘‘நீட் தேர்வுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு உச்சநீதிமன்றத்தால் சட்ட அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. நீட் தேர்வு பாதிப்பு குறித்து ஆராயும் குழு அமைக்க, தமிழக அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# ஆதிபராசக்தி மன்றங்கள் நிவாரண உதவி



விஜயபாரதம்

உலகம் முழுவதும் உள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மன்றங்கள் சார்பாக, 270 நாட்களில் இதுவரை 10 லட்சம் பேருக்கு கரோனா நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு கபசுரக் குடிநீர், அன்னதானம், மருத்துவப் பொருட்கள், அரிசி, மளிகைப் பொருட்கள், சானிடைசர்கள், முகக்கவசங்கள் என பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. அரசுத் துறையுடன் சேர்ந்து தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டோருக்கு உணவு வழங்குதல், துப்புரவு பணியாளர்கள், பார்வையற்றோர், திருநங்கைகள், சாலை ஓரம் வாழும் ஆதரவற்றவர்கள், மீனவர்கள் உள்ளிட்டோருக்கு உதவிகள், கால் நடைகளுக்கு உணவு என பல்வேறு நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொது இடங்களில் சுவரொட்டிகள்



விஜயபாரதம்

சென்னை மாநகரை தூய்மையாகவும், அழகாகவும் பராமரிக்க ஏதுவாக, அரசு கட்டடங்கள், பேருந்து நிறுத்த நிழற்குடைகள், பாலங்கள் உட்பட பொது இடங்களில் ஒட்டப்படும் சுவரொட்டிகளை அகற்றும் பணியில் இறங்கியுள்ளது மாநகராட்சி நிர்வாகம். மேலும், சுவரொட்டிகள் இல்லாத சென்னை என்ற இலக்கை எட்ட பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. சுவரொட்டி அகற்றுவது தொடர்பாக பொதுமக்கள் 1913 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அழைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சுவரொட்டி, சுவர் விளம்பரங்கள் செய்தே கட்சியை வளர்த்த ஆளும் கட்சியான தி.மு.கவும், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட அவர்களது கூட்டணியினரும் இதனை பின்பற்றுவார்களா, அவர்கள் இதனை மீறும் பட்சத்தில், மாநகராட்சி நிர்வாகம் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் சொல்லும்.

# கிருஷ்ணசாமி வரவேற்பு

புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி தன் அறிக்கையில், 'திரைப்படத் துறையினர் கூறுவதை போல, கருத்து சுதந்திரத்தை பறிக்கும் எந்த திருத்தச் சட்டமும் தற்போது கொண்டு வரப்படவில்லை. ஒரு திரைப்படத்திற்கு சான்றிதழ் வழங்கிய பிறகு இந்நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை கருதி மறு தணிக்கைக்கு மத்திய அரசு உத்தரவிட முடியும் என்பததே தற்போது புதிதாக சேர்க்கப்பட உள்ள திருத்தம். ஜாதி, மத, பாலியல் வன்முறைகளை துாண்டும் திரைப்படங்களை மறு தணிக்கை சட்டத்தால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். இச்சட்டம் இன்றைய காலகட்டத்திற்கு அவசியம். திரைப்பட படைப்பாளிகள் திரைக்கருவில் பிழை இல்லையேல் மறு தணிக்கைக்கு அஞ்ச தேவையில்லை' என்று கூறியுள்ளார்.

விஜயபாரதம்



# அரசு ஆக்கிரமிக்கும் கோயில் நிலம்



விஜயபாரதம்

அம்ருத் என்னும் திட்டத்தின்கீழ் ராஜபாளையம் நகர் முழுவதும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அந்த பாதாள சாக்கடை நீரை சுத்திகரிப்பு செய்து அதை வெளியேற்றும் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க, 800 ஆண்டுகள் பாரம்பரியமிக்க திருக்கோயிலான ஸ்ரீ அஞ்சல் நாயகி சமேத ஸ்ரீ மாயூரநாத சுவாமி திருக்கோயில் நிலத்தில் கட்டடம் கட்ட இராஜபாளையம் நகர திட்ட அலுவலகம் முடிவு செய்துள்ளது. இதனையடுத்து, உடனடியாக இடத்தை மாற்றவும், இந்த திட்டத்தை வகுத்து கொடுத்த அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்ய வலியுறுத்தி ராஜபாளையம் நகர விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பாக பூஜ்ய ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் சுவாமிகளின் தலைமையில், சிவனடியார்கள், ஹிந்து அமைப்பினர் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



விஜயபாரதம்

# தியாகராஜனுக்கு கண்டனம்

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் வரும் ஆயக்கட்டு பகுதிகளில் 527 இடங்களில் தண்ணீர் திருடப்படுவதாக தமிழக நிதி அமைச்சர் தியாகராஜன் கூறியுள்ளார். இதற்கு, பல்வேறு தரப்பிலும் கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன. இந்நிலையில், விவசாயிகள் சார்பில், பாரதிய கிசான் சங்க மாநில பொதுச் செயலர் பார்த்தசாரதியும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கையில், 'விவசாயத்திற்காக தண்ணீரை உறிஞ்சுவதை திருட்டு என சொல்வது தவறு. மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் தேவையை பற்றி யோசிக்கும் தமிழக அரசு, அவர்களுக்கு உணவு வழங்கும் விவசாயத் துறையின் தேவையையும் கருத்தில் கொள்ள வேண்டும். அடிப்படை நீர் ஆதாரத்திற்கு தீர்வு காண வேண்டும். அமைச்சர் இதை ஆராய வேண்டும்' என்றார்.

# அண்ணாமலை அறிக்கை



விஜயபாரதம்

தமிழக பா..ஜக தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட அண்ணாமலை, 'தமிழக பா.ஜ.கவின் தலைவர் எனும் பொறுப்பு என்னை பணிவும், பெருமையும் கொள்ள செய்கிறது. நம் கட்சி பல ஆண்டுகளாக பல காரியகர்த்தாக்களின் உயிர் தியாகங்களாலும் மற்றும் பல தன்னலமற்ற தலைவர்களின் தியாகங்களாலும் வழி நடத்தப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் தமிழ் பற்றும், தமிழ் பண்பாடு மீது அவர் கொண்டுள்ள பெருமையும் அனைவருக்கும் தெரியும். நம்முடைய கட்சியின் சித்தாந்தத்தையும், உயிரான தேசப் பற்றையும், தமிழ் மக்கள் மீது பிரதமர் கொண்டுள்ள பேரன்பையும் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்துச் செல்லும் வரை நாங்கள் ஓய மாட்டோம். ஜெய் ஹிந்த் வாழ்க பாரதம் வளர்க தமிழ்நாடு' என தெரிவித்துள்ளார்.


# அரசுக்கு மருத்துவர்கள் கண்ணீர் கடிதம்



விஜயபாரதம்

ஆயுர்வேத மருத்துவர்கள் 281 பேர், மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரேவுக்கு ஒரு கண்ணீர் கடிதம் எழுதியுள்ளனர். அதில், நீண்ட நாட்களாக, மகாராஷ்டிரா அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருப்பது. தங்களை தரக்குறைவாக நடத்துவது போன்றவை தங்களை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கி உள்ளது. இதனால், தாங்கள் தற்கொலை செய்துக்கொள்ள மகாராஷ்டிர அரசு, அனுமதி அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்கள் அனைவரும் அம்மாநிலத்தின் தொலைதூர கிராமங்களில் பணியாற்றும் BAMS படித்த மருத்துவர்கள். அங்குள்ள உள்ளூர் மக்களுக்கு வரும் நோய்கள், குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு, பாம்பு, தேள் கடி உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றனர். இவர்கள் கொரோனா காலத்தில் மிக சிறப்பாக அக்கிராமங்களில் பணியாற்றி நோய்தடுப்பு பணிகளை செய்தனர். இவர்களுக்கு மாத சம்பளமாக ரூ. 40,000 தரப்படும் என அம்மாநில அரசு உறுதி அளித்தது ஆனால், இன்றுவரை அதனை அளிக்கவில்லை. ரூ. 24,000 மட்டுமே அந்த மருத்துவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# டுவிட்டருக்கு கண்டனம்



விஜயபாரதம்

மத்திய அரசின் புதிய ஐடி விதிகளை பின்பற்றவில்லை என்றால் டுவிட்டர் நிறுவனத்திற்கு சட்ட பாதுகாப்பு வழங்க முடியாது, அந்த நிறுவனத்திற்கு எதிராக மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் அதை தடுக்க மாட்டோம் என்று டெல்லி உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. மேலும், இடைக்கால குறைதீர்ப்பு அதிகாரி வெளியேறியது ஏன்? இதை ஏன் நீதிமன்றத்தில் அறிவிக்கவில்லை. ஏன் புதிய இந்திய அதிகாரியை, நியமிக்கவில்லை. 15 நாட்களாக என்ன செய்தீர்கள் என டெல்லி உயர் நீதிமன்றம் டுவிட்டரை விளாசியது. இந்நிலையில், நாட்டின் சட்ட விதிகள்தான் முதன்மையானது. அதை டுவிட்டர் நிறுவனம் கட்டாயம் பின்பற்றியாக வேண்டும் என்று புதிதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

# தெலுங்கானா செல்லும் கிட்டெக்ஸ்

உலகின் இரண்டாவது மிகப்பெரிய குழந்தைகள் ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனமான கிட்டெக்ஸ் கேரளாவில் ரூ. 3,500 கோடி மதிப்பில், 30 ஆயிரம் பேருக்கு வேலை தரும் அளவிலான பெரிய உற்பத்தி தளத்தை துவக்கியது. ஆனால், அம்மாநில அரசு அதிகாரிகள், அவர்களுக்கு அளித்த கடும் நெருக்கடிகளால் அந்நிறுவனம், கேரளாவை விட்டு வெளியேறி வேறு மாநிலத்தில் தன் நிறுவனத்தை துவக்க முற்பட்டது. தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்கள் இதற்காக ஆராயப்பட்டன. இந்நிலையில், தெலுங்கானா அரசு, தங்கள் மாநிலத்தில் அத்தொழிலைத் துவங்க ஒரு தூதுக்குழுவை உடனடியாக பேச்சுவார்த்தைக்கு அனுப்பி பேசியது. மேலும், அந்த நிறுவன அதிகரிகளை தனி விமானத்தில் தெலுங்கானாவுக்கு அழைத்துச் சென்று பார்வையிடவும் ஏற்பாடு செய்துள்ளது.

விஜயபாரதம்




# உ.பி., யில் மீண்டும் யோகி ஆட்சி



விஜயபாரதம்

உத்தர பிரதேசத்தில் சில மாதங்களில் சட்டசபை பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், இந்தோ ஏசியன் நியூஸ் சர்வீஸ் என்கிற தனியார் செய்தி நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்புகளில் 52 சதவீத மக்கள் மீண்டும் பா.ஜ.கவின் யோகி ஆதித்யநாத் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவார் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். முன்னதாக, அங்கு நடைபெற்ற ஜில்லா பஞ்சாயத்து தேர்தலில், பா.ஜ.க பெருவாரியான வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவை குறைக்காத கேரளா



விஜயபாரதம்

பாரதத்தில் பெரும்பான்மையான மாநிலங்கள் கொரோனாவின் இரண்டாவது அலை நெருக்கடியிலிருந்து விரைவாக மீண்டு வருகின்றன. கொரோனாவை கையாள்வதில் உத்தரபிரதேசம், கர்நாடகா போன்ற மாநிலங்கள் அதிவேகமாகவும் சிறப்பாகவும் செயல்பட்டுள்ளன. ஆனால், கேரளாவில், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை தினசரி 8,000 முதல் 15,000 வரை தொடர்ந்து பதிவாகி வருகிறது. கடந்த ஒரு வருடமாக ஆயிரத்துக்கும் குறைவாக கொரோனா பாதிப்பு எண்ணிக்கை பதிவாகவில்லை. விகிதாச்சார அடிப்படையில் அடுத்த இடத்தில் மகாராஷ்டிர அரசு உள்ளது.

# கூகுளுக்கு எதிராக வழக்குகள்




விஜயபாரதம்

கூகுள் பிளே ஸ்டோரில் உள்ள செயலிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு பயனாளிகள் தள்ளப்பட்டுள்ளனர். மற்ற தளங்களில் உள்ள செயலிகளை பதிவிறக்கம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. மற்ற நிறுவனங்கள் தயாரிக்கும் செயலிகளை தங்கள் தொகுப்பில் இணைக்க நெருக்கடி கொடுக்கப்படுகிறது. இது தொழில் போட்டி மற்றும் நேர்மையாக தொழில் செய்வதற்கு எதிரானது. இந்த நடவடிக்கைகள் மூலமாக கூகுள் ஆதிக்கம் செலுத்துகிறது. செயலி பயனாளிகள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து அதிக தொகை வசூலிக்கப்படுகிறது என கூகுள் நிறுவனத்துக்கு எதிராக, அமெரிக்காவின் நியூயார்க், வடக்கு கரோலினா உட்பட, 36 மாகாணங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

# கட்டுரையின் பின்னணி




அமெரிக்காவை சேர்ந்த மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் எம்.ஐ.டி டெக்னாலஜி ரிவியூ என்ற அதன் பத்திரிகையில், பாரதத்தில் கொரோனா நிலை என்ற கட்டுரையை கடந்த ஜூலை 5ல் வெளியிட்டது. அதில், பாரதம் கொரோனா போரில் தோற்றுவிட்டது, கோவின் செயலி ஒரு தொழில்நுட்ப தோல்வி, கொரோனாவால் 48.56 லட்சம் பேர் இறந்தனர், 18 முதல் 44 வயதானவர்களுக்கு தடுப்பூசி இலவசம் இல்லை என பல பொய்யான செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், பாரத அரசு கொரோனா பெரும் தொற்றை மிக சிறப்பாக கையாண்டது, கோவின் செயலியை பெற 150க்கும் அதிகமான நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. கொரோனாவால் இறந்தவர்கள் எண்ணிக்கை 4.58 லட்சம் மட்டுமே (அமெரிக்காவில் 6 லட்சத்திற்கும் அதிகம்), 18 முதல் 44 வயதானவர்களுக்கு தடுப்பூசி இலவசம் என மத்திய அரசு அறிவித்துள்ளது என்பதுதான் உண்மை.

இந்த கட்டுரையை வெளியிட நிதியுதவி செய்த்து ராக்பெல்லர் பௌண்டேஷன் என்ற தொண்டு அமைப்பு. ராக்பெல்லர் பௌண்டேஷன், போர்ட் பௌண்டேஷன், ஜார்ஜ் சோரஸ் பௌண்டேஷன் உள்ளிட்ட பல தொண்டு நிறுவனங்கள், பாரதத்தில் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவும், அரசியல் நிலையற்றத் தன்மையை உருவாக்கவும், கலாச்சார சீரழிவை ஏற்படுத்தவும் பல காலமாக பெரும் தொகைகளை செலவிட்டு வருகின்றன. இதுவே இது போன்ற கட்டுரைகள் வெளியாவதன் பின்னணி.

விஜயபாரதம் தேசிய வார இதழ்
சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
93613 99006

# வலையில் சிக்கிய மீம்கள்






# புத்தக வெளியீடு




## பரதன் பதில்

*ஸ்டாலின் முதல்வராக வேண்டுதல் செய்தவர், வேண்டுதல் நிறைவேறியதால் தீக்குளித்து தற்கொலை செய்துகொண்டாராமே?*

**- ராஜா, மதுரை**

இப்படிப்பட்ட முரட்டு தொண்டர்கள் இருக்கும்வரை கழகங்களுக்கு கவலையே இல்லை. ஒரு சந்தேகம், இதுதான் அவர்கள் கற்றுக்கொண்ட பகுத்தறிவா?